## வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | 21 | T | I | பொருளியல் - I | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|

### பகுதி I

**அறிவுறுத்தல்.**


- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **பல்வேறு வினாக்களில் (1), (2), (3), (4), (5) என தரப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து தரப்படும் புள்ளடித்தாளில் உரிய இலக்கத்தின் மீது புள்ளடி (X) இடுக. (பரீட்சையில் விடையளிப்பதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்)**

01. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எது நியமக் கூற்றாகும்.
   1) நிறுவனங்கள் இலாப உச்சப்படுத்தலை எதிர்பார்ப்பதாக பொருளியல் கோட்பாடுகள் குறிப்பிடுகின்றன.
   2) ஊழியம் உற்பத்திச் செயற்பாட்டுக்கான மனித பங்களிப்பாகும்.
   3) உற்பத்தியாளரும் நுகர்வோரும் தீர்மானம் எடுத்தலின் போது அமையச்செலவை கருத்தில் கொள்கிறார்கள்.
   4) அரசாங்கம் சந்தையில் தலையிட வேண்டும்.
   5) இலங்கையின் தற்போதைய சனத்தொகை வளர்ச்சி வீதம் 1.0%

02. பொருளாதார வளமாகக் கருதப்படக் கூடியதைத் தெரிவு செய்க.
   1) நுகர்வு
   2) உற்பத்தித்திறன்
   3) அமையச்செலவு
   4) உற்பத்தி
   5) முயற்சியாண்மை

03. சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்திற்கும் மத்திய திட்டமிடல் பொருளாதாரத்திற்குமான வேறுபாடுகளில் ஒன்றாக **முன்னையதுடன்** தொடர்பாக அமையக் கூடியது.
   1) சில வளங்கள் தனியார் உரிமையாகவும் சில வளங்கள் அரச உரிமையாகவும் காணப்படல்.
   2) வளங்கள் முழுவதும் அரச உரிமையாகவும் காணப்படல்.
   3) வளங்கள் முழுவதும் தனியார் உரிமையாக காணப்படுவதுடன் அவை சந்தை சக்திகளால் ஒதுக்கீடு செய்யப்படும்.
   4) அதிகளவு வளங்கள் மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.
   5) அதிகளவு வளங்கள் தனியார் உரிமையாக காணப்படுவதுடன் அவை அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும்.

04. குறித்த பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையி வருமாறு





தனியார் பொருட்கள் சார்பாக ஒரு உற்பத்தி அதிகரிப்பு உற்பத்தி சாத்திய வளையியின் வழியே நிகழுமாயின்.

1) இது பொதுப் பொருட்களின் விலைகளில் எத்தகைய பாதிப்பையும் ஏற்படாது ஏனெனில் பொதுப் பொருட்கள் இலவசமானவை.
2) இது தனியார் பொருள் உற்பத்தியின் அளவை தொடர்ச்சியாக குறைக்கும்.
3) இது மொத்த உற்பத்தியை அதிகரிக்கும் ஏனெனில் பொதுப் பொருட்கள் தொடர்பற்றவை.
4) இது தனியார் பொருள் சார்பாக அதிகரிக்கும் அமையச் செலவைத் தோற்றுவிக்கும்.
5) இது பொதுப் பொருள் சார்பாக பூச்சிய அமையச் செலவைத் தோற்றுவிக்கும்.

05. வள ஒதுக்கீட்டு வினைத்திறன் கருதுவது.

1) பொருளாதாரத்தில் உள்ள வரையறைக்குட்பட்ட வளங்களையும் சமூகத் தெரிவுக்குப் பொருத்தமான வகையில் பிரித்து ஒதுக்குவதாகும்.
2) பொருளாதாரத்தின் அனைத்து வளங்களையும் உற்பத்திச் செய்முறையில் பயன்படுத்துவதைக் கருதும்.
3) பொருளாதாரத்தின் அனைத்து வளங்களாலும் பெறக் கூடிய உச்ச வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதாகும்.
4) நிறைதொழில் மட்டம் ,பூரண உற்பத்தி ஆகிய இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்வதைக் கருதுவதாகும்.
5) ஒரு பண்டத்தின் மேலதிக அலகொன்றை நுகர்வதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய மேலதிக பயனைக் கருதுவதாகும்.

06. சாதாரண பண்டம் ஒன்றிற்கான கேள்வி வளையியை (D) கீழ்வரும் வளையி காட்டுகின்றது..




**"கேள்விக்கோடு $D_1$ இலிருந்து $D_2$ நோக்கி நகர்வடைய காரணமாக அமையக் கூடியது"**

1) நெருங்கிய பதிலீட்டுப் பண்டத்தின் விலையில் ஏற்படும் குறைவு.
2) நிரப்புப் பண்டத்தின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
3) எதிர்காலத்தில் இப்பண்டத்தின் விலை குறைவடையும் என்ற நுகர்வோர் எதிர்பார்க்கை
4) கொள்வனவாளர் எண்ணிக்கையில் ஏற்படும் குறைவு.
5) கொள்வனவாளர் வருமானத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.

07. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகவும் சரியானது.

1) ஒரு இழிவுப்பண்டம் எப்போதும் நேர்க்கணிய விலைசார் கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.
2) ஒரு இழிவுப்பண்டம் எப்போதும் பதிலீடுகளைக் கொண்டதாக அமையும்.
3) ஒரு இழிவுப்பண்டம் எப்போதும் எதிர்கணிய குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்டதாக அமையும்.
4) ஒரு இழிவுப்பண்டம் எப்போதும் எதிர்கணிய வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியைக் கொண்டதாக அமையும்.
5) ஒரு இழிவுப்பண்டம் எப்போதும் நேர்க்கணிய விலை சார் கேள்வி நெகிழ்ச்சியையும் எதிர்கணிய வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியையும் கொண்டதாக அமையும்.


08. பயணிகளுக்கான சேவையை வழங்கும் கம்பனிகளின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி தொடர்பான அட்டவணை வருமாறு.

| விமான சேவை | பஸ் கம்பனி | கப்பல் கம்பனி | கார் கம்பனி | புகையிரத கம்பனி |
|---|---|---|---|---|
| $-0.5$ | $-0.7$ | $-0.8$ | $-1$ | $-1.5$ |

மேலே கூறப்பட்ட கம்பனிகள் அனைத்தும் சம சேவைக்கட்டணத்தில் சேவையை வழங்குகின்றன. தற்போது. எல்லா கம்பனிகளினதும் சேவைக்கட்டணம் சம வீதத்தினால் அதிகரித்தால்.எந்தக் கம்பனியின் விற்பனை வருமானம் **மிக அதிகளவில் அதிகரிக்கும்.**

1) விமான சேவை 2) பஸ் கம்பனி 3) கப்பல் கம்பனி
4) கார் கம்பனி 5) புகையிரத கம்பனி

09. இரண்டு நேர்கோட்டு நிரம்பல் கோடுகள் $OS_1$ மற்றும் $OS_2$ கீழே தரப்படுகின்றன.




விலையில் ஓர் அதிகரிப்பு ஏற்படுமாயின் நிரம்பல் நெகிழ்ச்சியில்

1) $OS_1$ மற்றும் $OS_2$ ஆகிய இரண்டிலும் குறைவடையும்.
2) $OS_2$ இனைக் காட்டிலும் $OS_1$ இல் குறைந்தளவு அதிகரிப்பை ஏற்படுத்தும்.
3) $OS_1$ இனைக் காட்டிலும் $OS_2$ இல் குறைந்தளவு அதிகரிப்பை ஏற்படுத்தும்.
4) $OS_1$ மற்றும் $OS_2$ இரண்டிலும் மாறாது
5) $OS_1$ மற்றும் $OS_2$ இரண்டிலும் மாறாப் பெறுமதியால் அதிகரிக்கும்.

10. கீழே தரப்பட்ட **ஒன்றைத் தவிர** மற்றையவை சந்தைச் சமநிலைக்கான நிபந்தனைகள் ஆகும். **அது எது**.

1) எதிர்பார்க்கப்படும் கேள்வி விலையும் நிரம்பல் விலையும் **சமமாகக்** காணாப்படும்.
2) எதிர்பார்க்கப்படும் கேள்வித் தொகையும் நிரம்பல்த் தொகையும் **சமமாகக்** காணாப்படும்.
3) மிகைக் கேள்வியும் மிகை நிரம்பலும் **பூச்சியமாகக்** காணப்படும்.
4) மிகைக் கேள்வி விலையும் மிகை நிரம்பல் விலையும் **பூச்சியமாக** அமைய வேண்டும்.
5) நுகர்வோர்மிகையும் உற்பத்தியாளன் மிகையும் **கட்டாயம்** சமமாகக் காணப்படும்.


11. X பண்டத்திற்கான கேள்வி நிரம்பல் அட்டவணை வருமாறு

| P | 10 | 20 | 30 | 40 | 50 |
|---|---|---|---|---|---|
| Qd | 5000 | 4000 | 3000 | 2000 | 1000 |
| Qs | 1000 | 2000 | 3000 | 4000 | 5000 |


சமநிலையில் நுகர்வோர் மிகையை மதிப்பிட்டால் அது.

*1) ரூபா. 30    2) ரூபா. 1500    3) ரூபா. 4500    4) ரூபா. 45000    5) ரூபா. 90000*


12. கீழே தரப்படும் $S_1$ மற்றும் $D_1$ என்பன X பண்டத்திற்கான கேள்வி நிரம்பல் கோடுகளைக் குறித்து நிற்கின்றது. $S_2$ மற்றும் $D_2$ ஆகிய கேள்வி மற்றும் நிரம்பல் கோட்டில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டுகின்றது. (1), (2), (3), (4) அல்லது (5) ஆகிய வரைபடங்களில் எது X பண்டத்தின் இணைப்புப் பண்டத்தின் விலையில் ஓர் அதிகரிப்பும் அதன் ஊழியரின் உற்பத்திதிறனில் ஏற்படும் அதிகரிப்பும் ஒரே சமயத்தில் நடைபெறுவதை எடுத்துக் காட்டுகின்றது.





(1)





(2)




(3)




(4)





(5)

13. குறித்த பண்டத்தின் மீது அரசு நேரில் வரியினை விதித்து இதன் காரணமாக சமநிலைத் தொகை மாற்ற மடையவில்லை எனின் கேள்வியானது.

1) முடிவிலி விலை சார் கேள்வி நெகிழ்ச்சி
2) அலகு விலை சார் கேள்வி நெகிழ்ச்சி
3) நெகிழ்ச்சி வாய்ந்தது.
4) நெகிழ்ச்சியற்றது.
5) பூச்சிய விலை சார் கேள்வி நெகிழ்ச்சி

14. கீழே தரப்படும் வரைபடமானது குறித்த பண்டத்தின் சந்தைக் கேள்வி கோடு (D) மற்றும் இரண்டு சந்தை நிரம்பல் கோடுகள் ($S_1$ மற்றும் $S_2$) ஆரம்பச் சமநிலைப் புள்ளி H ஆகும். அரசு அலகு வரியினை விதித்து அதன் விளைவாக புதிய சமநிலைப்புள்ளி G. ஆக மாற்றமடைந்தது.




அரசுவிதித்த அலகு வரியினை மதிப்பிடுவது

1) JG இற்கு இடையிலான செங்குத்துத் தூரம்
2) விலையில் ஏற்படும் EF அதிகரிப்பு
3) HG இற்கு இடையிலான சரிவு
4) KH இற்கு இடையிலான கிடைத் தூரம்
5) EI இற்கு இடையிலான தூரம்


15. X பண்டத்திற்கான வருடாந்த கேள்வி (Qd) நிரம்பல் (Qs) அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| **விலை (RS)** | **10** | **9** | **8** | **7** | **6** |
|---|---|---|---|---|---|
| **Qd ('000 தொகை)** | **4** | **6** | **8** | **10** | **12** |
| **Qs ('000 தொகை)** | **12** | **10** | **8** | **6** | **4** |

அரசு ஆகக் குறைந்த கட்டுப்பாட்டு விலையாக 9 ரூபாவை விதித்து அது நடைமுறையில் செயற்திறனாக இருக்க அரசு செலவு செய்யுமாயின் அரசாங்கத்தின் வருடதாந்தச் செலவு எவ்வளவு?

1) ரூபா. 90000
2) ரூபா. 72000
3) ரூபா. 54000
4) ரூபா. 36000
5) ரூபா. 18000

16. Y பண்டத்தின் கேள்வி நிரம்பல் கோடுகள் வருமாறு




அரச நடவடிக்கை காரணமாக நுகர்வோரின் நுகர்ச்சி மட்டமானது $0Q_1$ இலிருந்து $0Q_2$ ஆக அதிகரித்தது எனின்

1) Y பண்ட உற்பத்தியாளர் மீது $P_3$-$P_2$ அலகுவரி விதிக்கப்பட்டது.
2) Y பண்ட உற்பத்தியாளருக்கு $P_3$-$P_2$ அலகு மானியம் வழங்கப்பட்டது.
3) $0P_3$ ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலையாக விதிக்கப்பட்டது.
4) $0P_2$ ஆகக் குறைந்த கட்டுப்பாட்டு விலையாக விதிக்கப்பட்டது.
5) Y பண்ட நுகர்வோர் மீது $P_3$-$P_2$ அலகுவரி விதிக்கப்பட்டது

17. ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலை செயற்றிறன் வாய்ந்ததாக அமைவதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கை
 1) இறக்குமதி செய்தல்
 2) நிரம்பலைக் களஞ்சியப்படுத்தல்
 3) அரசு உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்தல்
 4) நடைமுறையிலுள்ள கேள்வியை ஊக்கப்படுத்தல்
 5) ஏற்றுமதி செய்தல்

18. உற்பத்திச் செயற்பாட்டில் உட்கிடையான செலவாகக் கருதப்படக் கூடியது.
 1) மூலப் பொருள் கிரயம் 2) ஊழியக்கிரயம் 3) மேந்தலைக்கிரயம்
 4) பொருளாதார இலாபம் 5) பூச்சிய சிக்கன இலாபம்.

19. குறுங்காலத்தில் மொத்த உற்பத்தி அதிகரிக்கும் போது.
 1) எல்லை உற்பத்தி கட்டாயம் அதிகரிக்கும்
 2) எல்லை உற்பத்தி கட்டாயம் குறைவடையும்
 3) எல்லை உற்பத்தி கட்டாயம் பூச்சியமாகக் காணப்படும்.
 4) எல்லை உற்பத்தி அதிகரிகலாம் அல்லது குறைவடையலாம்
 5) எல்லை உற்பத்தி எதிர்கணியமாகக் காணப்படும்.

20.

| **வெளியீடு** | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மொத்தச் செலவு** | 50 | 90 | 120 | 140 | 170 | 210 | 260 | 330 |

மேலே தரப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் நிறைபோட்டிச் சந்தையிலுள்ள நிறுவனம் 5 அலகுகளை உற்பத்தி செய்து 40 ரூபாவிற்கு விற்பனை செய்கின்றது எனின் நிறுவனம்,
 1) நிறுவனம் 10 நட்டத்தை அடையும் தொழிலை முடிவுறுத்தும்
 2) நிறுவனம் 10 இலாபத்தை அடையும் தொழிலை முடிவுறுத்தும்
 3) நிறுவனம் கட்டாயம் தனது வெளியீட்டை அதிகரிக்கும்.
 4) நிறுவனம் உற்பத்தி செய்யும் ஆனால் நட்டத்தை குறைப்பது அவசியமாகும்.
 5) நிறுவனம் அதன் இலாபத்தை உச்சப்படுத்தும்.

21. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் நிறைபோட்டிச்சந்தையின் பண்பு **அல்லாதது.**
 1) நிறுவனம் சுதத்திரமாக விலையினைத் தீர்மானிக்க முடியும்.
 2) அதிகளவிலான எண்ணிக்கையில் நிறுவனங்கள் காணப்படும்.
 3) பிரவேசிப்பதற்கும் வெளியேறுவதற்கும் பூரண சுதந்திரம் காணப்படும்.
 4) ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.
 5) கொள்வனவாளரும் விற்பனையாளரும் சந்தை தொடர்பான பூரணஅறிவைக் கொண்டிருப்பர்.

22. வர்த்தக சகடவோட்டத்தின் ஒரு உச்சியிலிருந்து இன்னொரு உச்சிக்கு செல்வதற்கு எடுக்கும் காலம் எவ்வாறு அழைக்கப்படும்
 1) பின்டைவு 2) உச்சம் 3) மீட்சி
 4) வர்த்தக சகடவோட்டத்தின் நீளம். 5) பொருளாதார வளர்ச்சி

23. பின்வரும் உற்பத்தி நடத்தையில் எது மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டின் போது உள்ளடக்கப்படும்.
 1) கொடுப்பனவு செய்யப்படாது வீட்டுத்துறையால் மேற்கொள்ளப்படும் வேலைகள்
 2) இலவசமாகக் கிடைக்கின்ற இயற்கை வளங்கள் (நிலம், நீர், வளி போன்றன)
 3) மனித உழைப்பின்றி விருத்தியடையும் இயற்கை வளங்கள் (காடுகள் போன்றன)
 4) கற்றலும் ஓய்வும்.
 5) சந்தையில் விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களும் சேவைகளும்.

24. அடிப்படை விலையானது பின்வருமாறு மதிப்பீடு செய்யப்படும்.
   1) உற்பத்தியாளர் விலை - உற்பத்தி மீது விதிக்கப்படும் தேறிய வரிகள்
   2) உற்பத்தியாளனின் விலை + இடைத்தரகர்களால் அறவிடப்படும் வர்த்தக தீர்வைகள் மற்றும் போக்குவரத்துச் செலவும் – அரசின் நுகர்வோர் மானியம் + நுகர்வோன் மீதான வரி
   3) உற்பத்தியாளர் விலை + உற்பத்தி மீது விதிக்கப்படும் தேறிய வரிகள்
   4) உற்பத்தியாளர் விலை + நுகர்வோர் மீது விதிக்கப்படும் பெறுமதிசேர் வரிகள்
   5) உற்பத்தியாளர் விலை + அரசின் நுகர்வோர் மானியம் + நுகர்வோன் மீதான வரி

25. மொத்த வெளியீட்டுப்பெறுமதி 400, மூலப்பொருட்களுக்கான கிரயம் 200, சேவைக்கட்டணங்கள் 150 மேலே தரப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில்
   1) இடைநுகர்வு 200 மற்றும் மொத்த கூட்டப்பட்ட பெறுமதி 200
   2) இடைநுகர்வு 350 மற்றும் மொத்த கூட்டப்பட்ட பெறுமதி 750
   3) இடைநுகர்வு 150 மற்றும் மொத்த கூட்டப்பட்ட பெறுமதி 750
   4) இடைநுகர்வு 350 மற்றும் மொத்த கூட்டப்பட்ட பெறுமதி 50
   5) இடைநுகர்வு 600 மற்றும் மொத்த கூட்டப்பட்ட பெறுமதி 150

26. வீட்டுத்துறை வருமானத்தில் தேசியவருமானத்துக்குள் **உள்ளடக்கப்படும்** வருமானம் எது
   1) உலகின் ஏனைய பாகங்களிலிருந்து கிடைக்கும் தேறிய தனிப்பட்ட இரண்டாம் நிலை வருமானம்.
   2) ஊழியர்களுக்கான இழப்பீடுகள்
   3) ஓய்வூதியங்கள்
   4) பொதுப்படுகடன் மூலம் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் வட்டிகள்
   5) வீட்டுத்துறையால் பெறப்படும் ஏனைய தேறிய உதவிகள்

27. வருமானச் சுற்றோட்ட மாதிரியில் பின்வருவனவற்றுள் எது சரியானது.
   1) வருமானம் = வெளியீடு = செலவு
   2) வருமானம் = வெளியீடு = உட்பாய்ச்சல்
   3) வெளியீடு = செலவு = வெளியீடு
   4) செலவு = வருமானம் = உட்பாய்ச்சல் = வெளிப்பாய்ச்சல்
   5) செலவு = வருமானமானது உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சலிலும் அதிகமாகும்

28. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எது பெருக்கித் தொழிற்பாட்டை சரியாகக் குறிப்பிடுகின்றது.
   1) மொத்தக் கேள்வியின் ஏதாவது ஒரு கூறில் ஏற்படும் அதிகரிப்பு தேசிய வருமானத்தில் அதைவிட கூடியளவிலான அதிகரிப்பை ஏற்படுத்தும்.
   2) முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பானது தேசிய வருமானத்தில் அதைவிட கூடியளவிலான அதிகரிப்பை ஏற்படுத்தும்
   3) வரியில் ஏற்படும் அதிகரிப்பானது தேசிய வருமானத்தில் அதைவிட கூடியளவிலான அதிகரிப்பை ஏற்படுத்தும்
   4) நிறுவனங்களுக்கான அரசாங்க உதவிகள் கண்டுபிடிப்புக்களை விருத்தி செய்வதற்கு அதிகளவு பங்களிப்புச் செய்யும்.
   5) பின்னடைவின் போது அரச கொள்வனவில் ஏற்படும் அதிகரிப்பு முதலீடுகளில் அதிகரிப்புக்கு வழி செய்யும்.


29. கீழே தரப்பட்டுள்ள பேரினப் பொருளாதார தரவுகளினைக் கருத்தில் கொண்டு கீழே தரப்பட்டுள்ள வினாவுக்கு விடை தருக?

| வருமானம் (Y) | செலவிக் கூடிய வருமானம் (Yd) | நுகர்வு (C) | முதலீடு (I) | அரச கொள் வனவு (G) | ஏற்று மதி (X) | இறக்கு மதி (M) | தேறிய ஏற்று மதி (X-M) | மொத்தச் செலவு (E) (C+I+G) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | -250 | 400 | 200 | 300 | 200 | 300 | -100 | 1000 |
| 2000 | 1750 | 2000 | 200 | 300 | 200 | 300 | -100 | 2400 |
| 4000 | 3750 | 3600 | 200 | 300 | 200 | 300 | -100 | 4000 |
| 6000 | 5750 | 5200 | 200 | 300 | 200 | 300 | -100 | 5600 |
| 8000 | 7750 | 6800 | 200 | 300 | 200 | 300 | -100 | 7200 |
| 10000 | 9750 | 8400 | 200 | 300 | 200 | 300 | -100 | 8800 |

மேலே தரப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் சமநிலை தேசிய வருமானம்

1) ரூபா 2000 2) ரூபா 4000 3) ரூபா 6000 4) ரூபா 8000 5) ரூபா 10000

30. கீழே தரப்படும் வரைபானது ஒரு பொருளாதாரத்தின் இரு மொத்த கேள்விக் கோடுகளை (AD) யும் குறுங்கால மொத்த நிரம்பல் வளையியையும் (SRAS) குறித்து நிற்கின்றது.




கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எதில் ஏற்படும் **அதிகரிப்பு** மொத்த கேள்விக் கோடு (AD), $AD_1$ இலிருந்து $AD_2$ நோக்கி நகர்வடைய ஏதுவாக அமையும்.

1) ஏற்றுமதி 2) சேமிப்புக்கள் 3) நாணயமாற்று விகிதம்.
4) வரி வீதங்கள் 5) வட்டி வீதங்கள்

31. கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எந்த கருவி தற்காலிகப் **பரிமாற்றூடகமாகத் தொழிற்படும்** ஆனால் **பெறுமானத் திரட்டாக தொழிற்பாடாதது.**

1) கடன் அட்டைகள் 2) நிலையான வைப்புக்கள் 3) சேமிப்பு வைப்புக்கள்
4) திறைசேறி உண்டியல்கள் 5) பரிமாற்றுண்டியல்கள்

32. பணச்சுருக்கம் பின்வருவனவற்றுள் எதனை பெரும்பாலும் ஏற்படுத்தும்

1) நுகர்வோரது கொள்வனவைத் தாமதப்படுத்தும்
2) வட்டிவீதங்களில் அதிகரிப்பை ஏற்படுத்தும்
3) இறக்குமதிகளில் அதிகரிப்பை ஏற்படுத்தும்
4) கடன் கொடுப்பனவுகளுக்கான பணத்திற்கான உண்மைப் பெறுமதியை குறைக்கும்.
5) மொத்தக் கேள்வியில் அதிகரிப்பை ஏற்படுத்தும்

33. இலங்கைப் பொருளாதாரத்தின் பணவீக்க அழுத்தங்களைக் **குறைப்பதற்குப்** பொருத்தமானது எது.

1) ஊழிய விளைதிறனில் ஏற்படும் அதிகரிப்பு
2) இலங்கை ரூபாவில் ஏற்படும் ஒரு குறைவு
3) நேர்க்கணிய வெளியீட்டு இடைவெளியில் ஏற்படும் குறுக்கம்
4) கடன்களுக்கான வட்டியில் ஏற்படும் குறைவு.
5) மொத்தக் கேள்வியில் ஏற்படும் அதிகரிப்பு

34. பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு என்பவற்றால் கருதப்படுவது குறைந்த பணவீக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் பணக் கொள்கையைத் தயாரிப்பதாகும் விலை உறுதிப்பாடும் பொருளாதார உறுதிப்பாடும் முக்கியம் பெறுவதற்கான காரணமாக **அமையாதது.**
   1) பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்
   2) வினைத்திறனுள்ள வகையில் வளங்களைப் பங்கீடு செய்தல்
   3) உற்பத்தியாளரதும், நுகர்வோரினதும் முதலீட்டாளரினதும் ஆபத்துக்களைக் குறைத்தல்
   4) பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தல்
   5) அரச கடன்களை முகாமை செய்தல்

35. இலங்கை மத்திய வங்கியின் **முகவராண்மைத் தொழிற்பாடக** அமைவது
   1) நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்
   2) பொதுப்படுகடன் முகாமைத்துவம்
   3) நாணயக் கொள்கையினைக் கட்டுப்படுத்தல்.
   4) நாணயங்களை வெளியீடு செய்தலும் விநியோகித்தலும்
   5) அலுவலசார் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமை செய்தல்

36. வணிக வங்கியொன்றின் இருப்பு நிலவரக்கூற்றில் உழைக்கும் சொத்துக்களில் உள்ளடங்கக் கூடியது எது?
   1) மத்திய வங்கியில் வைத்துள்ள காசு வைப்புக்கள்.
   2) ஏனைய உள்நாட்டு வங்கிகளில் இருந்து வரவேண்டிய பண மீதி
   3) திறைசேறி முறிகள்
   4) திரட்சியடையும் பணமீதி
   5) கையிலுள்ளதும் வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து வரவேண்டிய வெளிநாட்டுப் பணமீதி

37. பொதுவான வங்கிமுறைமையின் கீழ் தொழிற்படும் வணிக வங்கிகளின் சுருக்கிய இருப்பு நிலவரக் கூற்று வருமாறு

| பொறுப்புக்கள் | மில்லியன் ரூபா | சொத்துக்கள் | மில்லியன் ரூபா |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 10 000 | ஒதுக்குகள் | 4 000 |
| | | கடன் | 6 000 |
| **மொத்தம்** | **10 000** | **மொத்தம்** | **10 000** |

வங்கி முறைமையனது ரூபா 2000 மில்லியன் மிகை ஒதுக்கினைக் கொண்டுள்ளது எனின். வங்கி முறைமையின் சட்டப்படியான ஒதுக்கு வீதம் எவ்வளவு?

1) 60 %    2) 40%    3) 30%    `    4) 20%    5) 10%

38. பின்வரும் எப்பிரச்சினையானது அரச தலையீடு அவசியமானது என்பதனை குறிப்பிடுகின்றது.
   1) சூழல் மாசடைதலைத் தடுப்பதற்கு எதிர்கணிய வெளிவாரிவிளைவுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
   2) பொதுப்பண்டங்களின் விலை தளம்பாமல் இருக்க தாங்கியிருப்பைப் பயன்படுத்துவதற்கு.
   3) மேன்மையான பண்டங்களுக்கு சுதந்திர சந்தையில் ஆகக்குறைந்த விலையினை சமநிலை விலைக்கு மேலாக விதிப்பதற்கு.
   4) எதிர்கணிய வெளிவாரிவிளைவுகளுக்கு ஊக்குவிப்பு வழங்குவதற்காக.
   5) மேன்மையான பண்டங்களுக்கு சுதந்திர சந்தையில் ஆகக்குறைந்த விலையினை சமநிலை விலைக்கு கீழாக விதிப்பதற்கு.

39. மேன்மையானபண்டங்கள் சுதந்திரமான சந்தைப்பொருளாதாரத்தில் குறை உற்பத்திக்கு உட்படுகின்றன ஏனெனில்
   1) தனிப்பட்ட நன்மையானது சமூக நன்மையிலும் அதிகமாக இருத்தல்
   2) சமூக நன்மையானது சமூகச் செலவிலும் அதிகமாக இருத்தல்
   3) தனிப்பட்ட செலவானது தனிப்பட்ட நன்மையிலும் அதிகமாக இருத்தல்
   4) சமூக நன்மையானது தனிப்பட்ட நன்மையிலும் அதிகமாக இருத்தல்
   5) சமூக நன்மையானது தனிப்பட்ட நன்மைக்கு சமமாதல்.

40. அரசாங்கத்தினால் வழங்கப்படும் சேவையின் அளவுக்கு அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டியிருத்தல் என்பது
   1) பிரதிபலன் தொடர்பான தத்துவம்
   2) செலுத்தும் தகுதி தொடர்பான தத்துவம்.
   3) நிலைக்குத்தான நியாயத்துவம்
   4) கிடையான நியாயத்துவம்
   5) நியாயத்துவம்

41. வரி அடிப்படைக்கமைய வரிகள் வருமாறு

| வருமான மட்டம் | வரியின் அளவு |
|---|---|
| 50 000 | 12 500 |
| 100 000 | 25 000 |
| 200 000 | 50 000 |

மேலே தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இவ் வரி விதிப்பானது வரி வீதத்திற்கு அமைய எவ்வகையான வரியாகும்.
   1) தேய்வுமுறைவரி
   2) சமவீத வரி
   3) கூடிச்செல்லும் வரி
   4) பெறுமதிசேர் வரி
   5) நேரில்வரி

42. அரச வரவு செலவுத்திட்டத்தில் நடைமுறைச் செலவினத்தில் உள்ளடங்கும் கூறு எது?
   1) இயந்திர சாதனங்களின் கொள்வனவு
   2) கட்டடவாக்கம்
   3) ஓய்வூதியங்கள்
   4) வாகனக் கொள்வனவு
   5) நெடுஞ்சாலைகள் அமைத்தல்

43. எதிர்பாராத நிகழ்வுகளின் காரணமாக குறித்தகாலத்தில் வரவுசெலவுத்திட்ட ஒப்புதலை பெற்றுக் கொள்வதற்கு தவறும் சந்தர்ப்பத்தில் அதற்கான அனுமதியைப் பெறும் வரை, எதிர்வரும் நிதியாண்டிற்கு அந்தந்த அமைச்சுகளால் ஏற்றுக் கொள்ள வேண்டிய செலவுகளை, அரசின் ஒன்றிணைந்த நிதியிலிருந்து ஒதுக்குவதற்காக தற்காலிகமாக முன்வைக்கப்படும் செலவு அறிக்கை
   1) அரச வரவு செலவுத்திட்டம்
   2) ஒதுக்கீட்டு சட்ட மூலம்
   3) குறைச் செலவின ஒதுக்கு.
   4) கணக்கு வாக்கெடுப்பு.
   5) இடைக்கால வரவு செலவுத்திட்டம்..

44. சர்வதேச வர்த்தக ஒப்பீட்டு நயக் கோட்பாடு தொடர்பாகச் சரியானது
   1) மற்றைய நாட்டை விட அதிகளவு பொருட்களினை குறித்த பண்டத்தில் உற்பத்தி செய்தல்
   2) மற்றைய பண்டத்தை விட அதிகளவு பொருட்களினை குறித்த பண்டத்தில் உற்பத்தி செய்தல்.
   3) குறித்தவொரு பொருள் மற்றைய நாட்டை விட குறித்த நாட்டுக்கு குறைந்த எல்லைச் செலவில் உற்பத்தி செய்ய முடிதல்.
   4) குறித்தவொரு பொருள் மற்றைய நாட்டை விட குறித்த நாட்டுக்கு குறைந்த அமையச் செலவில் உற்பத்தி செய்ய முடிதல்.
   5) குறித்தவொரு பொருள் மற்றைய நாட்டை விட குறைந்த நீண்டகால சராசரிச் செலவைக் கொண்டிருத்தல்

45. இலங்கையின் மிகப் பெரிய இறக்குமதிச் சந்தைகளாக அமைபவை
   1) இந்தியாவும், சீனாவும்.
   2) ஐக்கிய அமெரிக்காவும், ஐக்கிய இராச்சியமும்.
   3) இந்தியாவும், ஐக்கிய இராச்சியமும்.
   4) இந்தியாவும், ஐக்கிய அமெரிக்காவும்
   5) சீனாவும், ஐக்கிய அமெரிக்காவும்

46. இலங்கைக்கு தேசிய ரீதியான உலகமயமாதலின் **வறையறையாகக்** கருதப்படக் கூடியது
   1) புதிய கருத்துக்களும் அனுபவங்களும் கிட்டுதல்.
   2) உலக உற்பத்தியளவு அதிகரித்தல்.
   3) பொருளாதார வளர்ச்சியின் உபாயமாகக் கையாளக்கூடியதாக இருத்தல்.
   4) வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தல்.
   5) அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குக் கூடுதலான நலன்கள் கிட்டுதல்.

47. இலங்கை இறக்குமதி செய்யும் **இடைநிலைப் பொருட்களுக்கான** உதாரணமாக அமைவது.
   1) தனியார் பாவனைக்கான கார்   2) துணிவகைகள்   3) கோதுமை மா
   4) பால்மா   5) இலத்திரனியல் உபகரணங்கள்

48. ஏனையவை மாறாத போது நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் அதிகரிப்பானது பின்வருவனவற்றுள் எதனை ஏற்படுத்தும்.
   1) ஏற்றுமதி விலைகளில் குறைவினை ஏற்படுத்தும்.
   2) ஏற்றுமதி விலைகளில் அதிகரிப்பினை ஏற்படுத்தும்
   3) உள்நாட்டுக் கேள்வியை அதிகரிக்கும்
   4) உள்நாட்டு ஊழியத்தைக் குறைவடையச் செய்யும்.
   5) உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்

49. குறித்த பொருளாதாரத்தின் சென்மதி நிலுவை தொடர்பான 2019 ஆம் ஆண்டுக்கான தரவுகள் வருமாறு.

| | |
|---|---|
| பொருள் ஏற்றுமதி வருமானம் | ரூபா 500 |
| சேவை ஏற்றுமதி வருமானம் | ரூபா 400 |
| பொருள் இறக்குமதிச் செலவினம் | ரூபா 800 |
| சேவை இறக்குமதிச் செலவினம் | ரூபா 300 |
| தேறிய முதனிலை வருமானம் | ரூபா +50 |
| தேறிய இரண்ராம் நிலை வருமானம் | ரூபா +100 |

மேலே தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவை 2019 ஆம் ஆண்டில்
   1) ரூபா 150   2) ரூபா 200   3) ரூபா 250   4) ரூபா 200   5) ரூபா 50

50. மிதக்கும் நாணயமாற்றுவீத முறைமையின் போது
   1) நாணயமாற்று வீதத்தினைத் தீர்மானிப்பதில் அரசு முழுமையாக தலையீடு செய்யும்.
   2) நாணயமாற்று வீதம் அந்நிய நாணய கேள்வி நிரம்பலுக்கேற்ப சீர்செய்யப்படும்.
   3) சென்மதி நிலுவையானது எப்பொழுதும் மிகையாகக் காணப்படும்.
   4) சென்மதி நிலுவையானது எப்பொழுதும் அரச வரவு செலவுத்திட்ட மீதிக்கு சமமாகக் காணப்படும்.
   5) நாணயத்தின் வெளியகப் பெறுமதி எப்பொழுதும் அதிகரிக்கும்.

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination. March - 2020**

| தரம் :- 13 (2020) | 21 | T | I | பொருளியல் - II | நேரம் :- 3 மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:**
உப பிரிவு (அ) விலிருந்து இரண்டு வினாக்களுக்கும் உப பிரிவு (ஆ) விலிருந்து இரண்டு வினாக்களுக்கும் கட்டாயமாகத் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

## உப பிரிவு (அ)

01. 1) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் நேர்க் கூற்றுக்களா?நியமக் கூற்றுக்களா எனக் குறிப்பிடுக?
அ. ஒவ்வொரு அரச ஊழியர்களுக்கும் மாதாந்த சம்பளம் 5000 ரூபா அதிகரிக்க வேண்டும்.
ஆ. பணநிரம்பலுக்கும் பொதுவிலைமட்டத்திற்குமிடையில் நேர்கணியத் தொடர்பு காணப்படும்.
இ. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1% ஆகக் காணப்படுகின்றது.
ஈ. இலங்கை தனது அபிவிருத்திக்காக வெளிநாட்டு உதவிகளைப் பெற வேண்டும்.
(4x1=4 புள்ளிகள்)

2) அ. அமையச் செலவு என்பதனை வரைவிலக்கணப்படுத்துக? (2 புள்ளிகள்)
ஆ. கூடிச்செல்லும் அமையச்செலவு விதி என்றால் என்ன? (2 புள்ளிகள்)

3) அ. பொருளாதாரமல்லா வளம் என்பதால் கருதப்படுவது என்ன? (2 புள்ளிகள்)
ஆ. பொருளாதார வளத்தின் பிரதான பண்புகளைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

4) பொருளாதாரத்தில் உள்ள வளங்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தல் பொருட்டு பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் எவை? (4 புள்ளிகள்)

5) அ. உற்பத்தி சாத்திய வளையி வரைதல் தொடர்பான பிரதான எடுகோள்கள் எவை? (2 புள்ளிகள்)
ஆ. அதிகரிக்கும் அமையச் செலவு தொழிற்படும் ஒரு பொருளாதாரத்தில் பின்வரும் நிகழ்வுகளைச் சாத்திய வளையியில் குறித்துக் காட்டுக?
i) காரணிவளப்போற்றில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
ii) வளங்கள் கீழுழைப்பில் உள்ள நிலைமை (2 புள்ளிகள்)

02. 1) அ. கேள்ளி விதியினை விளக்குக? (2 புள்ளிகள்)
ஆ. கேள்வி விதிக்கான எடுகோள்களைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

2) அ. தனிநபர்க் கேள்வியைச் சந்தைக் கேள்வியிலிருந்து வேறுபடுத்துக (2 புள்ளிகள்)
ஆ. சாதாரண பண்டம் ஒன்றிற்கான கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

3) சீனிக்கான சந்தைக் கேள்வி (Qd), நிரம்பல் (Qs) அட்டவணை வருமாறு

| P | Qd (millon) | Qs (millon) |
|---|---|---|
| 100 | 1.0 | 0.5 |
| 200 | 0.5 | 1.0 |

விலை 100 ரூபாவிலிருந்து 200 ரூபாவாக அதிகரிப்பின்

அ. நுகர்வோன் செலவு மாற்றத்தை கணிப்பிடுக? (2 புள்ளிகள்)

ஆ. நுகர்வோன் செலவு மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு கேள்வி நெகிழ்ச்சியை விளக்குக? (2 புள்ளிகள்)

4) நிரம்பல் கோடு நகர்வடைவதற்கு ஏதுவான காரணிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (4 புள்ளிகள்)

5) நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக? (4 புள்ளிகள்)

03. 1) சீனிக்கான சந்தைக் கேள்வி (Qd), நிரம்பல் (Qs) கோடுகள் பின்வரும் சமன்பாட்டின் மூலம் தரப்படுகின்றன.

$$Qd = 500 - 10p \qquad Qs = -100 + 20p$$

அரசாங்கம் அலகு வரியாக 3 ரூபாவை விதிக்கின்றது எனின்

அ. வரிக்குப்பின்னரான சமநிலை விலை மற்றும் தொகை யாது? (4 புள்ளிகள்)

ஆ. வரி மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு? (2 புள்ளிகள்)


இ. புதிய சமநிலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியை மதிப்பிடுக? (2 புள்ளிகள்)

ஈ. வரிக்குப் பின்னரான உற்பத்தியாளர் மிகையினைக் கணிப்பிடுக ? (4 புள்ளிகள்)

2) அ. ஆகக்கூடிய கட்டுப்பாட்டு விலையை அர்த்தமுள்ளதாக்குவதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் எவை? (2 புள்ளிகள்)

ஆ. ஆகக்கூடிய விலைக்கட்டுப்பாடு விதிப்பதன் காரணமாக சந்தை விலைப் பொறிமுறை இயக்கமற்றுப் போவதால் பற்றாக்குறையான பண்டங்களைப் பங்கீடு செய்வதற்கு விலையல்லா மூலகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

3) ஆகக்கூடிய கட்டுப்பாட்டு விலை விதிப்பதை கீழ்வரும் வரைபு காட்டுகின்றது.




a. ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலைக்கு முன்னர் பொருளாதார மிகைப் பிரதேசம்

b. ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலைக்கு பின்னர் பொருளாதார மிகைப் பிரதேசம்

c. பொருளாதாரமிகை இழப்புப் பிரதேசம் என்பவற்றைத் தருக.

d. ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலை காரணமாக B + D நுகர்வோர்மிகையினுள் உள்ளடங்குவதைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

(4x1 =4புள்ளிகள்)

04. 1) குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு மற்றும் நீண்ட கால உற்பத்தித் தொழிற்பாடு என்பவற்றை விளக்குக? (4 புள்ளிகள்)

2) அ. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்பதனை விளக்குக? (2 புள்ளிகள்)

ஆ. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியுடன் தொடர்புடைய எடுகோள்களைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

3) கீழே தரப்பட்டுள்ள காரணிகளில் குறுங்கால எல்லைச் செலவில் எவை தாக்கத்தை ஏற்படுத்தும் என சுருக்கமாக விளக்குக?

a. பெறுமானத்தேய்வுக்கான கிரயம்

b. மூலப்பொருள் கிரயம்

c. ஆதனவரி

d. காப்புறுதித் தவணைக் கொடுப்பனவு (4 புள்ளிகள்)

4) குறுங்கால சராசரி உற்பத்தி , எல்லை உற்பத்தி என்பன குறுங்கால செலவுக்கோடுகளுடன் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன.? (4 புள்ளிகள்)

5) அ. சந்தை அமைப்புக்கள் வேறுபடுவதற்கு அடிப்படையான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

ஆ. நிறைபோட்டிச் சந்தையின் இரு பிரதான பண்புகளைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

05. 1) பேரினப் பொருளாதாரக் கொள்கை என்பதனை விளக்குக? பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் சிலவற்றைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

2) பொருளாதார செயற்பாடுகளில் அரசதுறையின் பிரதான தொழிற்பாடுகளை விளக்குக? (4 புள்ளிகள்)

3)

| | |
|---|---|
| ஊழியருக்கான இழப்பீடு (கொடுப்பனவு) | 10000 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 12500 |
| நிலையான மூலதன நுகர்வு | 2500 |
| கலப்பு வருமானம் | 15000 |
| மானியம் நீங்கலான உற்பத்தி மீதான வேறு வரிகள் | 2000 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான தேறிய வரி | 1000 |

பின்வருவனவற்றைக் கணிக்குக :

அ. அடிப்படை விலையிலான மொத்த கூட்டப்பட்ட பெறுமதி

ஆ. சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி (2x2=4 புள்ளிகள்)

4) கீழ்வருவன **ஒவ்வொன்றிற்கும் இரண்டு** உதாரணங்கள் தருக

அ. தேசிய வருமானத்திலிருந்து வீட்டுத்துறைக்குக் கிடைக்காத வருமானங்கள்

ஆ. தேசிய வருமானத்தில் உள்ளடங்காத வீட்டுத்துறைக்குக் கிடைக்கப் பெறும் வருமானங்கள் (2x2=4புள்ளிகள்)

5) நுகர்வுத் தொழிற்பாடு (C) = 600 + 0.8 Yd

முதலீட்டுச் செலவினம் (I) = 200

அரச கௌ்வனவுகள் (G) = 300

தேறிய ஏற்றுமதிகள் (X-M) = - 100

தன்னியல்பான வரிகள் = 250

தரவுகள் யாவும் மில்லியன் ரூபாவில்

தன்னியல்பான வரிகள் 100 மில்லியனால் அதிகரிக்கும் அதேவேளை அரச கொள்வனவுகளும் 100 மில்லியனால் அதிகரிக்குமாயின்

அ. தேசிய வருமானம் மாற்றமடையுமா? விளக்குக (2 புள்ளிகள்)

ஆ. வரவு செலவுத்திட்ட மீதி மாற்றமடையுமா? விளக்குக? (2 புள்ளிகள்)

## உப பிரிவு (ஆ)

06. 1) அண்மிய பணத்திற்கும் பணப்பதிலீட்டுக்குமிடையேயான வேறுபாட்டை விளக்குக? *(4 புள்ளிகள்)*

2) அ. பணத்திற்கான கேள்வி என்றால் என்ன? *(2 புள்ளிகள்)*
ஆ. பொதுமக்கள் பணத்திற்கான கேள்வியை ஏற்படுத்துவது ஏன்? *(2 புள்ளிகள்)*

3) நாணயத் தளம் என்றால் என்ன? இது எவ்வாறு பணநிரம்பலுடன் தொடர்புபடுகின்றது.? *(4 புள்ளிகள்)*

4) கெயின்சின் கோட்பாட்டின் அடிப்படையில் கேள்வித்தூண்டல் பணவீக்கத்தை விளக்குக? *(4 புள்ளிகள்)*

5) சட்டப்படியான ஒதுக்குத் தேவை 20% வங்கியானது 40 மில்லியன் காசு ஒதுக்கினையும் 160 மில்லியன் கடன்களையும் முற்பணங்களையும் கொண்டுள்ளது.அத்துடன் 200 மில்லியன் மொத்த கேள்வி வைப்புக்களையும் கொண்டுள்ளது.
அ. இந்த வங்கியானது பொதுவான வங்கிமுறைமையின் கீழ் தொழிற்படுகின்றது எனக் கருதுக. இந்த வங்கி அதன் கடனை விரிவுபடுத்த முடியுமா? உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக? *(2 புள்ளிகள்)*
ஆ. சட்டப்படியான ஒதுக்குத் தேவை 15% ஆக மாற்றமடையுமாயின் வங்கிவழங்கும் கடனில் எவ்வளவு அதிகரிப்பு அல்லது குறைவு ஏற்படும். *(2 புள்ளிகள்)*

07. 1) சந்தைத் தோல்வி என்றால் என்ன?சந்தைத் தோல்வியில் தாக்கத்தைச் செலுத்தும் பிரதான காரணிகள் எவை?. *(4 புள்ளிகள்)*

2) உலகளாவிய பொதுப்பண்டம் என்றால் என்ன? உலகளாவிய பொதுப்பண்டத்தை அடையாளப்படுத்த உதவும் பண்புகள் எவை? *(4 புள்ளிகள்)*

3) அ. வரி விதிப்பின் நோக்கங்கள் எவை? *(2 புள்ளிகள்)*
ஆ. வரி அறவிடுவதால் நியாயத்தன்மை என்ற தத்துவமானது பூர்த்தி செய்ய வேண்டிய இரண்டு நிபந்தனைகளைக் குறிப்பிடுக? *(2 புள்ளிகள்)*

4)

| **விடயம்** | **மில்லியன் ரூபா** |
|---|---|
| கொடை உள்ளடங்கலான அரசின் மொத்த வருமானம் | 170 000 |
| அரசின் மொத்த வருமானம் (கொடை நீங்கலாக) | 165 000 |
| வரி வருமானம் | 150 000 |
| வரியல்லா வருமானம் | 15 000 |
| கொடைகள் | 5 000 |
| மொத்த செலவினம் தேறிய கடன் வழங்கல் உள்ளடங்கலாக. | 200 000 |
| மொத்த மீண்டெழும் செலவினங்கள் | 175 000 |
| வட்டிக் கொடுப்பனவு | 10 000 |
| மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | 25 000 |
| பொது முதலீடு | 20 000 |

மேலே தரப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட தரவுகளுக்கமைய பின்வருவனவற்றைக் கணிக்குக.
அ. நடைமுறைக் கணக்கு மீதி *(2 புள்ளிகள்)*
ஆ. முதன்மைக் கணக்கு மீதி *(2 புள்ளிகள்)*

5) நிரம்பல் பக்கக் கொள்கை என்பதனை வரையறுத்து ,நிரம்பல் பக்கக் கொள்கை கருவிகளைக் குறிப்பிடுக? *(4 புள்ளிகள்)*

08\. 1) ஒப்பீட்டு நயக்கோட்பாடு என்பதனை விளக்குக. ஒப்பீட்டு நயக்கோட்பாட்டுக்கான மூலங்கள் எவை? (4 புள்ளிகள்)

2) தீர்வை வரி அல்லாத பாதுகாப்பு வாதச் செயற்பாடுகளைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

3) அ.பண்ட வர்த்தக மாற்று விகிதம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
ஆ. பண்ட வர்த்தகமாற்று விகிதம் விகிதம் குறைவடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

4) குறித்தவொரு நாட்டில் காலணி உற்பத்தி நிறுவனமொன்று ஒரு சோடிக் காலணியை 5 000 ரூபா விலையில் விநியோகிக்கின்றது எனக் கருதுக. அக்காலணிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளை (தோல், நூல்போன்றவை) இறக்குமதி செய்வதற்காக 3 000 ரூபா செலவாகியது எனக் கருதுக. மேலும் உள்நாட்டு நிறுவனம் உற்பத்தி செய்யும் காலணிகளுக்குச் சமனான காலணிகளை இறக்குமதி செய்வதுடன் அதுவும் உள்நாட்டுச் சந்தையில் 5 000 ரூபாப்படி விநியோகிக்கப்படுவதாகக் கருதுக. உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாப்பதற்காக இறக்குமதியாகும் காலணி மீது 10% இறக்குமதி தீர்வை வரியை விதிப்பதாகக் கருதுக. மெய் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதம் யாது?

5\. பொதுச் சந்தை என்றால் என்ன? உதாரணங்கள் தருக? (4 புள்ளிகள்)

09\. 1) வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

2) உலகமயமாதலுக்குப் பாதகமாக முன்வைக்கப்படும் வாதங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

3) இலங்கை மத்திய வங்கியின் அண்மைக்கால தரவுகளின் அடிப்படையில் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பை விளக்குக? (4 புள்ளிகள்)

4) இலங்கையின் ஏற்றுமதி வியாபாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிடுக?அதற்காக முன்வைக்க கூடிய தீர்வுகள் சில தருக? (4 புள்ளிகள்)

5) பொருளாதார ஒருங்கிணைப்புக்களின் வடிவங்கள் நான்கைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)

10\. 1) சென்மதி நிலுவை அட்டவணையில் நீண்டகாலப் பற்றாக்குறையொன்று காணப்படும் போது அதற்காக முன்வைக்கக்கூடிய தீர்வுகளைக் குறிப்பிடுக?

2) வெளிநாட்டு வள இடைவெளி என்றால் என்ன? வெளிநாட்டு வள இடைவெளி மறைப் பெறுமதியில் காணப்பட ஏதுவான காரணங்கள் எவை?

3) வெளிநாட்டுச் சொத்துக்களில் உள்ளடங்கும் கூறுகளைக் குறிப்பிடுக?

4) பெயரளவு நாணயமாற்று வீதம் மற்றும் மெய் நாணயமாற்றுவீதம் என்பவற்றை வறையறுக்குக?

5) நாணயமாற்று விகித மதிப்பிறக்கத்தின் பொருளாதார விளைவுகளைக் குறிப்பிடுக?